நாள்- 03.03.2023

Case No. OS.252/2017

PW.2 - விஜயன்– பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வாதி தினகரன் இருக்கும் ஊரைசேர்ந்தவன் என்றால் சரிதான். தினகரன் வசிக்கும் தெருவில் நான் குடியிருக்கிறேனா என்றால் இல்லை. அதேபோல் பிரதிவாதி வெங்கடேசன் வசிக்கும் தெருவில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் விக்கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் விக்கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக நான் சாட்சி அளிக்க வந்துள்ளேன். வாதி தினகரன் எனக்கு நண்பர் என்றால் சரிதான் , அவர் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். விக்கிரைய ஒப்பந்தத்தை யார் தயார் செய்தார் என்றால் பத்திர எழுத்தர் குருமூர்த்தி எழுதினார், யார் சொல்லி எழுதினார் என்றால் பிரதிவாதி வெங்கடேசன் சொல்லி எழுதினார். வாதி தினகரன் 1 செண்ட் நிலம் ரூ.30 ஆயிரம் என்று விலை பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார் அது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 1 செண்ட் நிலம் ரூ.30 ஆயிரம் என்று விலைபேசியதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை நான் நேரடியாக சென்று பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி நிலம் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் என்னென்ன உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் வீடு உள்ளது என்றும் அதற்கு உண்டான மதிப்பும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, போடப்பட்டுள்ளதாக குருமூர்த்தி படித்து சொன்னார். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் எத்தனை தாள்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன பேனாவில் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் கருப்பு மை பேனாவில்

கையொப்பம் செய்தேன். பணம் கொடுக்கல், வாங்கல் எங்கு நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் அவருக்கு சாதகமாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.